தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# இந்திய வன மரபியல் நிறுவனம் 3 ஆய்வகங்களுடன் ஒப்பந்தம்

**கோவை, ஜூலை 17–**

கோவை, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், தேக்கு மர சாகுபடியை அதிகரிக்கும் நோக்கத்துடன், மூன்று திசு வளர்ப்பு ஆய்வகங்களுடன், ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

மத்திய அரசின், வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், கோவையில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், திசு வளர்ப்பு முறையில் வீரியம் மிகுந்த தேக்கு மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக, ஆய்வகங்களுடன், ஒப்பந்தம் செய்துள்ளது.

தேக்கு மர சாகுபடியில், நவீன தொழில்நுட்பங்கள் குறித்த சர்வதேச ஆன்லைன் கருத்தரங்கில், இந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. மைசூரு லேப் லேண்ட் பயோடெக், பெங்களூரு ஹூ குகுள் பயோடெக், கடலூர் சாந்தி குளோனல் நர்சரி ஆகிய ஆய்வகங்கள், வன மரபியல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

கோவை வன மரபியல் நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன், டாக்டர் யசோதா, திசு வளர்ப்பு ஆய்வக பொறுப்பாளர் ரேகா வாரியர் ஆகியோர், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

மத்திய வனத்துறை அமைச்சக சிறப்பு செயலாளர் சஞ்சய் குமார், இந்திய வன ஆராய்ச்சி கவுன்சில் தலைவர் ராவத், மலேசியா மற்றும் ஜப்பான் விஞ்ஞானிகள் இந்த கருத்தரங்கில், தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

39. News in Dinamalar, Coimbatore, 17.07.2021, ICFRE signed MoU with three laboratories.